விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 303 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 01 புதன்கிழமை (18.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ஈஸ்டர் தாக்குதலின் முக்கிய கோப்புக்கள் கோட்டாவிடம்

### சபையில் போட்டுடைத்தார் மைத்திரி



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழுக்கள், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் சில இரகசிய கோப்புக்களை வழங்கியுள்ளன என முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## 20ஆம் திகதி ஹர்த்தால் தமிழரசுக் கட்சி ஆதரவு

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் தாயகத்தில் நீதிபதி சரவணராஜாவுக்கு நீதி கோரி இடம்பெறவுள்ள ஹர்த்தாலுக்கு பொதுமக்கள் தமது பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டும் என தமிழரசுக் கட்சி சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் 02

### நிலைமையை நேரில் அறிய

## உயர்மட்ட அதிகாரிகள் குழு குருந்தூர்மலைக்கு விஜயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் உள்ள குருந்தூர் மலைப் பகுதிக்கு புத்தசாசன அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட திணைக்கள உயர் அதிகாரிகள் 11

## சுயதொழில் செய்வோருக்கும் ஓய்வூதியம்

(கொழும்பு)

சுயதொழில் செய்பவர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் 11

## வெடிபொருள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் இறங்குதுறை பகுதியில் கடற்படையினரால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையில், ஒரு கிலோ கிராம் TNT 02

### நோக்கம் தவறாக இருப்பினும்

# நிறைவேற்றதிகாரத்தை ஒழிக்க பூரண ஆதரவு வழங்குவோம்

### பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவிப்பு



(கொழும்பு)

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுமேயானால் அதற்கு நாம் பூரண ஆதரவை நல்குவோம் என ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



### கையிருப்பை மறைத்து

## நாட்டில் அரிசியில்லை என விவசாயிகள் நாடகமாடுகின்றனர்

### விவசாய அமைச்சர் ஆதங்கம்

(புத்தளம்)

அரிசி கையிருப்பை மறைத்து அரிசி தட்டுப்பாடு இருப்பதாக வியாபாரிகளும் விவசாயிகளும் நாடகமாட முயற்சிப்பதாக விவசாய அமைச்சர் 11

## ஒரே பிரசவத்தில் ஆறு ஆண் குழந்தைகள்



(கொழும்பு)

கொழும்பு காசல் மகளிர் வைத்தியசாலையில் ராகம பகுதியைச் சேர்ந்த தாய் ஒருவருக்கு ஒரே பிரசவத்தில் ஆறு ஆண் குழந்தைகள் 11

### பாடசாலைகளை

## டிஜிட்டல் மயமாக்க ஹூவாவி இணக்கம்

(பீஜிங்)



இலங்கையிலுள்ள பாடசாலைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குவது தொடர்பில் 11

### இந்தோனேசியா, பாகிஸ்தான்

## நாடுகளின் தலைவர்களோடு ஜனாதிபதி முக்கிய கலந்துரையாடல்

(பீஜிங்)

சீனாவில் நடைபெறும் 'One Belt - One road' சர்வதேச மாநாட்டில் பங்கேற்பதற்காக சீனாவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு உலக நாடுகளின் தலைவர்களினை சந்தித்து 12



நடுவு நிலை தவறாது நன்மை காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் (1987-1992)

அமரர்
**காசிப்பிள்ளை தவராசா**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவர்கள் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பாடசாலை சமூகம்**
**யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை**

(17498)

## கண்ணீர் அஞ்சலி



யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் புகழ் பூத்த அதிபர்களுள் ஒருவரான

அமரர் **காசிப்பிள்ளை தவராசா**

(ஓய்வுநிலை அதிபர் - யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை)

அவர்கள் 16.10.2023 அன்று இறைவனடி சேர்ந்தார். அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் துயரில் நாமும் பங்கு கொண்டு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(17501)

**முன்னைநாள் அதிபர்கள், ஆசிரியர்கள், யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம்**


## காணி விற்பனைக்கு

நான் கொடுப்பதற்கு பழகிக்கொண்டேன். காரணம் என்னிடம் அதிகமாக இருப்பதால் அல்ல. ஒன்றுமே இல்லாமல் இருப்பவன் வலி புரிந்து கொண்டதால்...

யாழ் பொன்னம்பலம் வீதியில் 3 பரப்பு காணியும் வீடும், யாழ் பொன்னம்பலம் வீதி 1 ஆம் ஒழுங்கையில் 2 பரப்பு காணியும் 3 பரப்பு காணியும், யாழ் பொன்னம்பலம் வீதி 2 ஆம் ஒழுங்கையில் 6 பரப்பு காணியும் 3 பரப்பு காணியும், யாழ் வைத்தியசாலைக்கு முன்பாக காந்தி வீதியில் 6 பரப்பு, 4 பரப்பு, 3 பரப்பு காணியும், யாழ் விக்ரோறியா வீதியில் 16 பரப்பு காணியும், 12 பரப்பு காணியும், 14 பரப்பு காணியும், யாழ் பலாலி வீதியில் பல்கலைக்கழக சந்திக்கு அண்மையில் 5 பரப்பு, 6 பரப்பில் அமைந்த காணியும் வீடும், யாழ் கோயில் வீதி கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 8 பரப்பு காணியும் வீடும், யாழ் நல்லூர் கோயில் வீதியில் கோயில் வீதி முகப்புடன் 25 பரப்பு காணியும், யாழ் கஸ்தூரியார் வீதியில் 3 பரப்பு காணியும், யாழ் K.K.S துறைமுகத்திற்கு அண்மையில் 40 பரப்பு, 60 பரப்பு, 100 பரப்பு காணியும், யாழ் சென் ஜோன்ஸ் பாடசாலைக்கு முன்பாக 5 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நவீனசந்தைக்கு முன்பாக 16 அடி அகலம் 200 அடி நீளம் கொண்ட மாடிக்கடையும் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 52 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட 3 கடைகளும் விற்பனைக்கு உண்டு.

(17499)

தொடர்புகளுக்கு :
**077 723 2535**


## நிறைவேற்ற...

ஆங்கிலத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தான் என்ன செய்ய வேண்டும் என்று தெரியாத நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தடுமாறுகின்றார். மக்களின் ஆணையை இழந்த ஒரு பாராளுமன்றத்தில் தங்கி இருக்கும் அவர் குழப்பத்தில் மூழ்கியுள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்து, பாராளுமன்றத்தின் மூலம் அதிகாரத்தில் தொடரும் ஆளும் தரப்பின் திட்டம் பற்றி பேசப்படுகின்றது. எனக்கு அது குறித்து விவரம் ஏதும் தெரியாது. ஆனால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிக்கும் நகர்வு முன்னெடுக்கப்பட்டால் நாம் எப்போதும் அதை ஆதரிக்க வேண்டும்.

அது, குறுகிய நோக்கத்துக்காகவோ அல்லது சுயநலன்களுக்காகவோ அல்லது வஞ்சக எண்ணத்தோடோ முன்னெடுக்கப் பட்டாலும் கூட அந்த முறைமையை ஒழிப்பதற்கு ஏதேனும் முயற்சி எடுக்கப் பட்டால் - அந்த எதேச்சதிகார முறைமையை நீக்குவதற்கு நாம் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

ஏனென்றால், வேறு வழிமுறைகளில் இந்த முறைமையை ஒழிக்கச் சந்தர்ப்பம் கிடைக்காது. இத்தகைய குழப்பமான நோக்கங்களுக்கு மத்தியில்தான் இந்த முறைமையை ஒழிக்க வாய்ப்பு கிட்டும் என்றால் நாம் அதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த முறைமை எம்மை விட்டுத் தொலைவதற்கு இதைத் தவிர வேறு வாய்ப்பு கிடைக்காது. கிடைத்தால் நாம் தந்திரோபாயமாக அதைப் பயன்படுத்த வேண்டும்.

ஆனால், அப்படி அந்த ஆட்சி முறைமையை ஒழிப்பதற்காக இடைக்கால ஏற்பாடாக இந்த ஜனாதிபதியின் பதவிக் காலத்தை சற்று நீடிக்க வேண்டும் என்ற திட்டத்துக்கு நாம் இணங்க முடியாது.

மக்களின் வாக்களிக்கும் உரிமையை மறுத்துக் காலம் கடத்தி அதிகாரத்தில் நீடிக்கும் திட்டத்துக்கு நாம் ஒத்துவர முடியாது என்றும் அவர் தெரிவித்தார். (ந-7)

## 20 ஆம் திகதி...

அக்கட்சியின் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு பதவியில் இருந்து இராஜினமாச் செய்து நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டமையை எதிர்த்தும்,

இந்த மோசமான நிகழ்வை மீண்டும் மீண்டும் உலகுக்கு எடுத்துக்காட்டவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

ஆகவே இதற்கென அனைவரது ஒத்துழைப்பினையும் எதர்பார்க்கிறோம். ஒற்றுமையினூடாக எம் உரிமைகளினை நிலைநாட்ட ஒன்றிணைந்திடுவோம் என்றுள்ளது. (7)

## வெடி...

வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தென்னந்தோப்பு ஒன்றில் சந்தேகத்துக்கிடமான பொதி ஒன்று காணப்பட்டு பரிசோதிக்கப்பட்டது.

இதன்போதே குறித்த பொதியில் சுமார் ஒரு கிலோவும் 950 கிராமும் கொண்ட TNT மற்றும் நூலையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

வெடிமருந்துகளைப் பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்காக இந்த அதிக சக்தி வாய்ந்த வெடிபொருட்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும்,

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக இந்த வெடி பொருட்கள் கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப் பட்டுள்ளது. (7)


## பணியாளர்கள் தேவை

இலுப்பகடவை மன்னார் பிரதேசத்தில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

1. காசாளர் - ஆண்/ பெண்
2. கொள்வனவாளர் - ஆண் (மோட்டார் சைக்கிள் வைத்திருத்தல் வேண்டும்.)
3. சமையலாளர் (தங்கி வேலை செய்வது விரும்பத்தக்கது)

மேற்படி பணியாளர்கள் இலுப்பகடவை பிரதேசத்திற்கு அண்மையில் இருப்பவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

(C-7443)

**074 386 3050**

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும்.

(C-7427)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் திருமதி ஜெயந்தினி ஹிரிசாந்தன் அவர்களுடைய பாசமிகு தந்தையார்

அமரர் **மாணிக்கர் செல்லத்துரை**

அவர்கள் இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(17490)

**பாடசாலைச் சமூகம்,**
**யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹமாஸ் அமைப்பிடம் பணயக்கைதிகளாக சிக்கியுள்ள 27 இலங்கையர்கள்

## நிமல் பண்டார

(காசா)

**இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்திய ஹமாஸ் அமைப்பினர் நூற்றுக்கும் மேற்பட்டவர்களை பணயக்கைதிகளாக பிடித்துச் சென்ற நிலையில் அவர்களில் 27 இலங்கையர்களும் அடங்குவதாக இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.**



“தற்போது, காசாவின் வடக்குப் பகுதியில் வாழும் மக்கள் தெற்குப் பகுதிக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர்.

அவர்களில் 27 இலங்கையர்கள் உள்ளதாக பாலஸ்தீன அலுவலக பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், சுமார் 150 இஸ்ரேலியர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் ஹமாஸ் அமைப்பிடம் பணயக்கைதிகளாக இருப்பதாக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இவர்களில் இலங்கையர்கள் உட்பட 36 நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்களும் அடங்குவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (5-6)

## மசகு எண்ணெய்யின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை நேற்று அதிகரித்துள்ளது.

இதன்படி உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 86.68 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 89.81 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

இதேவேளை உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 3.11 அமெரிக்க டொலராகவும் உள்ளது.(5-6)

## பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற அலிசாஹிர் மௌலானா



(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலிசாஹிர் மௌலானா நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றுள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்றம் கூடியபோது அவர் பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றுக் கொண்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட் அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே அலிசாஹிர் மௌலானா நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## மின் கட்டணத்தை அதிகரிக்க சமர்ப்பித்த தரவுகளை நிராகரித்தது

### பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

(கொழும்பு)


மின் கட்டணத்தை அதிகரிக்குமாறு கோரி இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகள் சமகாலத்திற்கு பொருந்தாதவை என இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோரப்பட்டுள்ள மின் கட்டண திருத்தத்தை மேற்கொள்ள சமீபத்திய தரவுகளை சமர்ப்பிக்குமாறு மின்சார சபைக்கு இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (5-6 )

## நாட்டின் கடன் மறுசீரமைப்புக்கு சீனாவின் எக்சிம் வங்கி இணக்கம்

### மத்திய வங்கி ஆளுநர்



(கொழும்பு)

கடன் மறுசீரமைப்புக்கு சீனாவின் எக்சிம் வங்கி இணங்கியமை மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த உச்சி மாநாட்டுடன் இணைந்து மொரோக்கோவில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையின் பொருளாதாரம் மீட்சியடைவதன் காரணமாக, ஆயுள் காப்புறுதி நிறுவனங்கள் நிலையான நிலைக்குத் தரமுயர்த்தப்பட்டுள்ளதாக பிசிட் றேட்டிங் இன்ஸ்சிரியூட் தெரிவித்துள்ளதுடன்.

இதன்படி, இந்நாட்டிலுள்ள ஆயுள் காப்புறுதி நிறுவனங்கள் அபாய நிலையிலிருந்து விடுபட்டுள்ளதாகவும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வெற்றிகரமாக இடம்பெற்று வருவதாகவும் கூறியுள்ளது. (5-6)

## 14 வயதுக்குட்பட்ட சிறார்களில் 10 சதவீதமானோர் தொழுநோயால் பாதிப்பு



(கொழும்பு)

நாட்டில் தொழுநோயாளர்களில் 10 சத வீதமானோர் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என சுகாதார அமைச்சின் தொழு நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது. சிறந்த முறையில் தொழு நோயைக் கட்டுப்படுத்தும் நாடொன்றில், சிறுவர் தொழு நோயாளர்களின் எண்ணிக்கை 4 வீதத்திற்கும் குறைவாகக் காணப்பட வேண்டும். மேலும் இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் 1155 தொழுநோயாளர்கள் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அந்த பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார். (5-6)

## தொடரும் பௌத்த மயமாக்கல் மயிலத்தமடுவில் புத்தர்சிலை வைப்பு

(மட்டக்களப்பு)

மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தலைமையில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராத யஹம்பத்தின் பங்களிப்புடன் புதிய புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

மாதவனை மயிலத்தமடு பிரதேசம் பாரம்பரியமாக தமிழ் பால் பண்ணையாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், அப்பகுதியை சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள சிங்கள குடியேற்றவாசிகளுக்கு ஆதரவாக புதிய புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ் விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.



அதேவேளை தமிழர் பகுதிகளில் தொடர்ந்து காணி அபகரிப்பிலும், குடிசார் பரம்பலை மாற்றியமைக்கவும், பௌத்த மயமாக்கல் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தரம்சாலாவில் தென்னாபிரிக்காவை தட்டித் தூக்கியது நெதர்லாந்து

## உலகக்கிண்ணத்தில் 2ஆவது அதிர்ச்சி சம்பவம்

உலகக் கிண்ண அரங்கில் நெதர்லாந்து அணி முதல் வெற்றியை பெற்று வரலாறு படைத்தது. நேற்றைய லீக் போட்டியில் தென்னாபிரிக்காவை 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இம்முறை ஏற்கெனவே ஆப்கன் அணி, இங்கிலாந்தை வென்றது. தற்போது இரண்டாவது அதிர்ச்சி அரங்கேறியுள்ளது.

இந்தியாவில் உலகக் கிண்ணத் தொடரின் 13ஆவது சீசன் நடக்கிறது. நேற்று இமாச்சல பிரதேசத்தில் உள்ள தர்மசாலாவில் நடந்த லீக் போட்டியில் தென்னாபிரிக்கா, தகுதிச்சுற்றில் இருந்து முன்னேறிய நெதர்லாந்து அணிகள் மோதின. மோசமான வானிலை, மழை காரணமாக போட்டி இரண்டு மணிநேரம் தாமதமானது. பின் 43 ஓவர் போட்டியாக நடத்தப்பட்டது.



தென் ஆப்ரிக்க அணிக்கு விக்ரம்ஜித் சிங் (2), மேக்ஸ் ஓதவுத் (18) ஜோடி சுமார் ஆரம்பம் கொடுத்தது. பின் ஆக்கர்மான், பாஸ் டி லீட் இணைந்தனர். 'வேகத்தில்' மிரட்டிய ரபாடா, பாஸ் டி லீடுவை (2) ஆட்டமிழக்கச் செய்தார். ஆக்கர்மேன், 12, சைபராந்த் 19 ஓட்டங்கள் எடுத்தனர். தேஜா நிதமன் னுரு, ஸ்காட் எட்வர்ட்ஸ் சேர்ந்து அவ்வப்போது பவுண்டரி அடித்து ஆறுதல் தந்தனர். மீண்டும் மிரட்டிய ஜான்சென், இம்முறை தேஜாவை (20) திருப்பி அனுப்பினார். வான் பீக் (10) நிலைக்கவில்லை. நெதர்லாந்து அணி ஒரு கட்டத்தில் 27 ஓவரில் 112/6 என திணறியது.

பின் வரிசையில் கேப்டன் ஸ்காட் எட்வர்ட்ஸ், வான் டெர் மெர்வி சேர்ந்து கடைசி நேரத்தில் வேகமாக ஓட்டங்கள் சேர்த்தனர். கோயட்சீ வீசிய போட்டியின் 35வது ஓவரில் அடுத்தடுத்து இரண்டு பவுண்டரி, ஒரு சிக்சர் என வான் டெர் மெர்வி அடிக்க, 15 ஓட்டங்கள் கிடைத்தன.

ரபாடா பந்தில் பவுண்டரி அடித்த ஸ்காட், ஒருநாள் அரங்கில் 14வது அரை சதம் எட்டினார். 8வது விக்கெட்டுக்கு 64 ஓட்டங்கள் சேர்த்த போது, மெர்வி, 29 ரன்னில் அவுட்டானார். ஆர்யன் தன் பங்கிற்கு 3 சிக்சர் அடித்தார். நெதர்லாந்து அணி 43 ஓவரில் 245/8 ஓட்டங்கள் எடுத்தது.



சரிந்த 'டாப்'

தெனனாபிரிக்க அணிக்கு குயின்டன் டி ஹொக், பவுமா ஜோடி சுமார் ஆரம்பம் தந்தது. கடந்த இரு போட்டியில் சதம் விளாசிய குயின்டன், இம்முறை 20 ஓட்டங்களுக்கு அவுட்டானார். மெர்வி சுழலில் பவுமா (16) போல்டானார். மார்க்ரம் ஒரு ஓட்டங்களில் போல்டானார். சுழலில் தொடர்ந்து அசத்திய மெர்வி, இம்முறை துசெனை வெளியேற்றினார். தென் ஆப்ரிக்கா 44/4 ஓட்டங்கள் எனத் திணறியது.

வேகமாக ஓட்டங்கள் சேர்த்த கிளாசன் (28), ஜான்சென் (9) நிலைக்கவில்லை. போராடிய மில்லர் 43 ஓட்டங்கள் எடுத்து போல்டாக, சிக்கல் ஏற்பட்டது. கோயட்சீயும் (22) கிளம்ப, தென்னாபிரிக்க வெற்றிக்கு கடைசி 54 பந்தில் 91 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ரபாடா (9) ஏமாற்றினார்.

தென்னாபிரிக்க அணி 42.5 ஓவரில், 207 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

நெதர்லாந்தின் வான் பீக், மீகெரென், மெர்வி, லீடு தலா 2 விக்கெட் சாய்த்தனர்.

**முதல் வெற்றி**

தென்னாபிரிக்கா, நெதர்லாந்து அணிகள் 1996 முதல் 8 ஒருநாள் போட்டிகளில் மோதின. இதில் 6ல் தென்னாபிரிக்கா வென்றது. ஒரு போட்டிக்கு முடிவில்லை.

முதன் முறையாக நேற்று நெதர்லாந்து அணி, வெற்றி பெற்றது. (7)

# ஆப்கான் வீரருக்கு எச்சரிக்கை




போட்டியின்போது ஒழுங்கீனமாக நடந்து கொண்ட ஆப்கானிஸ்தான் வீரர் குர்பாசிற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

டில்லியில் நடந்த உலக கிண்ண லீக் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி (284/10, 49.5 ஓவர்) 69 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'நடப்பு சம்பியன்' இங்கிலாந்தை (215/10, 40.3 ஓவர்) வீழ்த்தியது.

இப்போட்டியின் 19வது ஓவரில் ஆப்கானிஸ்தான் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரஹ்மானுல்லா குர்பாஸ் (80) 'ரன்-அவுட்' ஆனார். 'பெவிலியன்' திரும்பிய போது சதமடிக்கும் வாய்ப்பை நழுவவிட்ட விரக்தியில் இருந்த இவர், தனது துடுப்பை வைத்து 'பவுண்டரிரோப்', இருக்கையை ('சேர்') பலமாக தாக்கினார்.

ஐ.சி.சி., 2.2 விதிமுறைப்படி, சர்வதேச போட்டியில் கிரிக்கெட், மைதான உபகரணங்கள், ஜெர்சி, இதர பொருட்களை தவறாக பயன்படுத்துவது குற்றமாகும். இதனையடுத்து ஐ.சி.சி., போட்டி மத்தியஸ்தர் ஜெப் குரோவ், ரஹ்மானுல்லா குர்பாசிற்கு எச்சரிக்கை விடுத்தார். தவிர இது போன்ற செயலில் ஈடுபட்டது முதன்முறை என்பதால் இவருக்கு, ஒரு தகுதி இழப்புபுள்ளிமட்டும்வழங்கப்பட்டது.(7)




## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023
## புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 3 | 3 | 0 | 6 |
| 2 | நியூசிலாந்து | 3 | 3 | 0 | 6 |
| 3 | தென்னாபிரிக்கா | 3 | 2 | 1 | 4 |
| 4 | பாகிஸ்தான் | 3 | 2 | 1 | 4 |
| 5 | இங்கிலாந்து | 3 | 1 | 2 | 2 |
| 6 | ஆப்கானிஸ்தான் | 3 | 1 | 2 | 2 |
| 7 | பங்களாதேஷ் | 3 | 1 | 2 | 2 |
| 8 | அவுஸ்திரேலியா | 3 | 1 | 2 | 2 |
| 9 | நெதர்லாந்து | 3 | 1 | 2 | 0 |
| 10 | இலங்கை | 2 | 0 | 2 | 0 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA – SRI LANKA

## INVITATION TO BIDS
## SUPPLY OF IT EQUIPMENT FOR COMPUTER UNIT
## UNIVERSITY OF JAFFNA
## UJ/F/NCB/003/2023

Chairman, Department Procurement Committee, University of Jaffna, Thirunelvely invites sealed bids from eligible bidders for Supply of IT Equipment for Computer Unit for University of Jaffna as described below.

1. Bidding will be conducted through the National Competitive Bidding (NCB) procedure.

2. Bidder should have at least five years experience in the relevant field in SriLanka.

3. Interested eligible bidders may obtain further information from the Assistant Bursar / Supplies **(Contact No: 021-2220962)** of the University of Jaffna, and inspect the bidding documents at the Supplies Branch of the University from **9.00 am to 3.00 pm from the date of 18.10.2023 to 09.11.2023 at free of charge.**

4. A complete set of bidding documents in English may be purchased by interested bidders on submission of a written application to the Assistant Bursar / Supplies, or could be downloaded from the University website **www.jfn.ac.lk** upon payment of a non-refundable fee of Rupees **3,500/=** either in cash at the Shroff Counter of the University of Jaffna or to the credit of Peoples' Bank University of Jaffna Branch, account no: **970000060000276.** The cash receipt of the Shroff or the bank deposit slip to be attached with the bidding documents. The documents may be purchased until **2.30 pm from 18.10.2023 to 09.11.2023**

5. Bids must be delivered in duplicate to be addressed The Bursar, University of Jaffna, Thirunelvely, on or before **2.00 pm on 10.11.2023**. Please indicate the "Supply of IT Equipment for Computer Unit- **UJ/F/NCB/003/2023 10.11.2023"** on the left-hand corner of the envelope.

6. All bids must be accompanied by a Bid Security addressed to the, **"Vice Chancellor, Department Procurement Committee, University of Jaffna,** valid for **120 days (08.03.2024)** from the date of the bid opening as specified in the following Table.
**Supply of IT Equipment for Computer Unit, University of Jaffna**

| Serial No | Description Items | Quantity | Bid Security (Rs) |
|---|---|---|---|
| 01 | Desktop Computer | 50 Nos | 150,000.00 |
| 02 | 11kVa UPS | 03 Nos | |
| 03 | Wireless Access Point | 03 Nos | |
| 04 | Printer | 02 Nos | |
| 05 | Laptop Computers | 02 Nos | |
| 06 | Head Phone (PC) | 30 Nos | |
| 07 | Web Camera (PC) | 05 Nos | |

7. Pre-Bid meeting will be held on **01.11.2023 at 10.00 am** in the Board Room of University of Jaffna


8. The bids shall be deposited in the 'Tender Box' available in the Bursar's Office of the University, or sent under Registered Cover to be received on or before the deadline to the address given Clause No.5.

9. Late bids will be rejected.

10. The bids will be opened at **2.00 pm** on **10.11.2023,** in presence of the bidders or their authorized representatives who choose to attend the bid opening at the board room of the University.

**The Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**
**Thirunelvely.**
**TP. / Fax No: 021-2220962, 021-222[illegible]** (CF7441)

# சுடலைக்குளம் பகுதியில் 18,750 லீற்றர் கோடா மீட்பு



(தருமபுரம்)

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுடலைக் குளம் பகுதியில் கோடா, கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் என்பன பொலிஸாரால் மீட் கப்பட்டுள்ளன.

சுடலைக்குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி நடைபெறு வதாக இராமநாதபுரம் பொலி ஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று சுற்றி வளை ப்பை மேற்கொண்ட பொலிஸார் 18,750 லீற்றர் கோடா ,80 லீற் றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத் திக்கு பயன்படுத்தும் உபகரணங் கள் என்பவற்றை கைப்பற்றி யுள்ளனர். கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் பொலி ஸாரைக் கண்டவுன் தப்பிச் சென்ற நிலையில் சந்தேக நபர் களை கைது செய்வதற்கான நடவடிக்கையையும் மேலதிக விசாரணைகளையும்இராம நாத புரம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (5-6-316)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த மாதத்தின் முதல் 15 நாட்களில் மாத்திரம் 50 ஆயிரத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட் டுக்கு வருகை தந்துள்ள னர் என இலங்கை சுற் றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி, இந்த மாதம் 50 ஆயிரத்து 395 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு விஜ யம் மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை 12,261 இந்திய சுற்றுலாப்பயணி களும், 4,554 ரஷ்ய சுற்று லாப்பயணிகளும் 3,269 சீன சுற்றுலாப்பயணிகளும் 3,180 ஜேர்மன் சுற்றுலாப் பயணிகளும் இந்த மாதம் நாட்டுக்கு வருகை தந்துள் ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (5-6)

## ஈஸ்டர் தாக்குதல்

# தெரிவுக்குழுவை நியமிக்குமாறு பாராளுமன்றத்தில் பிரேரணை

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் கள் தொடர்பாக பிரித்தானி யாவின் சனல் 4 வெளியிட்ட ஆவணப்படத்தின் ஊடாக முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டு களை விசாரிப்பதற்காக பாரா ளுமன்றத்தின் தெரிவுக்கு முவை நியமிக்கும் பிரேரணை நேற்று பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

கொழும்பு மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் பிரதீப் உந்து கொடவினால் குறித்த பிரே ரணை சபையில் சமர்ப்பிக்கப் பட்டது. அதில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் விதிமுறைகளுக்கு அமைய 11 பேர் கொண்ட குழுவொன்றை நியமிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-6)

# சடுதியாக அதிகரித்த டொலரின் பெறுமதி

(கொழும்பு)

அமெரிக்க டொலரின் பெறு மதி நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில் நேற்று சடுதி யாக அதிகரித்துள்ளது. இல ங்கை மத்திய வங்கி வெளி யிட்டுள்ள நேற்றைய நாணய மாற்று விகிதங்களின்படி, அமெ ரிக்க டொலரின் விற்பனை விலை 329.41 ரூபாவாகவும் கொள்வனவு விலை 318.27 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும் கனேடிய டொல ரின் விற்பனை விலை 243. 20 ரூபாவாகவும், கொள்வ னவு விலை 232.12 ரூபாவா கவும் பதிவாகியுள்ளது.

இதன்படி, யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி.349.32 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 334.39 ரூபாவாக வும் பதிவாகியுள்ளது.

அதேசமயம், ஸ்டெர்லிங் பவுண்டின் நேற்றைய விற் பனை பெறுமதி 403.28 ரூபா வாகவும், கொள்வனவு பெறு மதி 387.28 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடை நிறுத்தப்பட்ட சிற்றூர்தி சேவையை மீள ஆரம்பிக்குமாறு

## பொதுமக்கள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சங்கானை மருத்துவமனை ஊடாக இடம்பெற்ற வழித்தடல் 788 ஆம் இலக்க சிற்றூர்த்திச் சேவையை மீண்டும் நடத்துமாறு மருத்துவமனைக்கு வரும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள் போக்குவரத்து பயணங்களின் போது சிரமங்களை எதிர்நோக்குவதையடுத்து குறித்த வழித்தடல் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த 11 ஆம் திகதி குறித்த வழித்தடல் சேவை இடைநிறுத்தப்பட்டமையால் மருத்துவமனைக்கு வருவோர் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து குறித்த சேவையை மீள ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-6)

# மணல் அகழ்வில் ஈடுபட்ட

## 2 டிப்பரும், உழவு இயந்திரம் ஒன்றும் பறிமுதல்

(தருமபுரம்)

அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்ற முயன்ற இரண்டு டிப்பர் வாகனங்களும், உழவு இயந்திரம் ஒன்றுடன் மூன்று சந்தேக நபர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாற்றுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மணல் ஏற்றுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று நடத்திய வீதிச் சோதனையின் போது குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (5-6-316)

# மன்னாரில் பேருந்துடன் டிப்பர் மோதி விபத்து



(மன்னார்)

மன்னார்- முள்ளிக்குளம் வீதியில் நேற்று காலை 7:30 மணியளவில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துடன் டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

முள்ளிக்குளத்தில் இருந்து மன்னார் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பயணிகள் போக்குவரத்து பேருந்து ஒன்றை எதிர்த் திசையில் இருந்து வந்த டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாவத்துறை பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (5-6-285)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 220 | 200 | 280 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 400 | 400 |
| தக்காளி | 300 | 300 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 160 | 150 | 150 |
| கோவா | 160 | 180 | 150 | 200 |
| கரட் | 200 | 250 | 280 | 300 |
| பூசணி | 80 | 80 | 70 | 80 |
| புடோல் | 100 | 160 | 120 | 200 |
| வாழைக்காய் | 160 | 180 | 160 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 300 | 450 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 240 | 280 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 450 |
| வெண்டக்காய் | 120 | 200 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 150 | 160 |
| பயற்றங்காய் | 350 | 400 | 250 | 300 |
| லீக்ஸ் | 160 | 150 | 200 | 200 |
| பீற்றூட் | 120 | 150 | 140 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 200 | 200 |
| போஞ்சி | 400 | 450 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 160 | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 400 | 400 | 500 | 480 |
| வெங்காயப்பூ | 350 | 400 | 400 | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 160 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 150 |

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2941

மதுசா




தர்மிகா




வதுசன்




டக்சனா




இலக்கியா




தர்சன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசாவை ஆக்கிரமிப்பது தவறு இஸ்ரேலை எச்சரிக்கும் பைடன்

(வோஷிங்டன்)

இஸ்ரேல் மீண்டும் கா்சாவை முழுமையாக ஆக்கிரமிப்பது மிகப் பெரிய தவறாக முடியும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் எச்சரித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்கு அளித்த நேர்காணலில் பைடன் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இஸ்ரேலுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வந்த பைடன் தற்போது பாலஸ்தீனத்திற்காகவும் குரல் கொடுத்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் ஹமாஸ் இயக்கத்தை அழிப்பது அவசியம். ஆனால் ஹமாஸ் பிடியில் உள்ள காசாவை முழுவீச்சில் இஸ்ரேல் ஆக்கிரமிக்க நினைப்பது தவறு மேலும் போரில் குழந்தைகளும் பெண்களும் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

போரில் இஸ்ரேலுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அமெரிக்கா வழங்கும் என உறுதியளித்த ஜோபைடன் இஸ்ரேல் போர் விதிகளுக்கு உட்பட்டு நடக்கும் என நம்புவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் ஜோ பைடன் இன்று இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 – 08 – 1936



மறைவு 16 – 10 – 2023


## திருமதி. கந்தசாமி மகேஸ்வரி

*நெல்லியடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி மகேஸ்வரி அவர்கள் கடந்த 16.10.2023 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 18.10.2023 புதன்கிழமை செட்டித்தறை வீதி நெல்லியடி எனும் முகவரியில் உள்ள அன்னாரது இல்லத்தில் காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகி பூதவுடல் நல்லடக்கத்திற்காக காலை 10 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.* (சி-7442)

**தகவல்:**
**மருமகன், பேரப்பிள்ளைகள்**
**இந்திராகபே, கணேசன் காட்வெயர் உரிமையாளர்கள்**

# போருக்கு முன்னர் மற்றும் பின்னரான புகைப்படத்தை வெளியிட்ட இஸ்ரேல்




(ஜெருசலேம்)

இஸ்ரேல் மீது காசா நடத்திய முதல்நாள் தாக்குதலுக்குப் பிறகு இஸ்ரேலில் ஏற்பட்ட சேதங்கள், போருக்கு முன் போருக்குப்பின் என இரு படங்களாக இஸ்ரேல் வெளியிட்டுள்ளது. போருக்கு முன்பு ஒக் டோபர் 6 இருப்பதை விட, காசா தாக்குதல் நடத்திய ஒக்டோபர் 7 ஆம் திகதி மிகுந்த சேதங்களை இஸ் ரேல் சந்தித்துள்ளது.

இப்படங்கள் செயற்கைக் கோள் மூலம் எடுக்கப்பட்டவை என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இந்நிலையில் இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதல்களில் காசா பகுதியில் வசிக்கும் 2,300 பேர் உயிரிழந்துள்ளதாகப் பாலஸ்தீன தரப்புக்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

மேலும். 10,000இற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது. காசா மருத்துவமனைகளில் ஏற்கனவே சிகிச்சையில் பயன்படுத்தப்படும் மருந்துகள் மற்றும் கருவிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், காயமடைந்து வருவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இஸ்ரேலில் ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் 41 நாடுகளை சேர்ந்தவர்கள் உயிரிழந்துள்ள தாகவும் இது ஹமாஸ் அமைப்புக்கும், இஸ் ரேலுக்கும் இடையேயான போர் மட்டுமல்ல, இது உலகளாவிய போர் என்றும் வெளியுறவுத்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. (5-6)

# காசாவில் நீரினால் பரவும் நோய்களால் அபாயம்

## ஐ.நா அறிக்கை

(ஜெருசலேம்)

காசாவில் நீரினால் நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக பாலஸ்தீனிய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிறுவனம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

காசாவில் கடைசியாகச் செயற்படும்கடல்நீரை உப்பு நீக்கும் ஆலை நேற்று மூடப்பட்டுள்ளது. அத்தோடு நீரை தூய்மையாக்கும் நடவடிக்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நீரிழப்பு மற்றும் நீரினால் பரவும் நோய்கள் பற்றிய கவலைகள் அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் நிறுவனம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தெற்கு காசாவின் சில பகுதிகளில் நேற்று மூன்று மணிநேரம் நீர் கிடைத்த போதும் அவை அந்தப் பகுதியில் உள்ள மக்களில் 14 சதவீதமானவர்களுக்கு மட்டுமே போதுமானதாக இருந்ததாகவும் அறிவித்துள்ளது. (5-6)

# இராசிபலன்

18.10.2023
ஐப்பசி 01, புதன்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 12.11மணிவரை
அனுசம் முன்னிரவு 8.50 மணிவரை

சுபநேரம் -4.32-6.02மணிவரை
இராகுகாலம்-12.02-1.32 மணிவரை
சதுர்த்தி விரதம், அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம் - பரணி, கார்த்திகை

**வளவன்**

**மேஷம்:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் மேலோங்கும் நாள், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கடகம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், உறவினர் பகை மாறும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், புதிய பாதை புலப்படும் நாள்.

**மகரம்:** பலரது அன்பிற்குப் பாத்திரமாவீர்கள், இலாபகமான நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம்.

**ரிஷபம்:** நம்பி வந்தவர்களுக்கு உதவும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**சிம்மம்:** பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், வாகன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.

**கும்பம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும் வாய்ப்புண்டு, திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**மிதுனம்:** செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், எடுத்த காரியங்களை எளிதில் முடிக்க உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், செயற்பாட்டில் வெற்றி கிடைக்கும்.

**தனுசு:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, உடல் நலனில் சிறு இடையூறுகள் ஏற்பட்டு அகலும், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், காரிய அலைச்சல்கள் சற்று கூடும்.

**மீனம்:** தடைகள் விலகி தன வரவு கூடும் நாள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், கடுமையான எதிர்ப்புகள் சட்டரீதியான சாதகமாகிவிடும், பயணங்கள் கைகூடும்.

**உயர்ந்த இலட்சியம் மனிதரின் செயல்களுக்கு சிறப்பைத் தருகிறது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 311





கிறேன். இந்தப் பூமண்டலத்தை ஏக சக்ராதிபதியாக ஆளத்தகுந்தவர் ஒருவர் உண்டு என்றால் அவர் இளவரசர் அருள்மொழிவர்மர் தாம். பிறவியிலேயே அத்தகைய தெய்வ கடாட்சத்துடன் சிலர் பிறக்கிறார்கள். சற்றுமுன் சில வர்த்தகத் தலைவர்களும் கைக்கோளப் படைச் சேநாதிபதிகளும் வந்துபேசிக் கொண்டிருந்தார்களே, அது உன் காதில் விழுந்ததா? இளவரசருக்கு என்றால் நம் வர்த்தகர்கள், காசிலேயே கருத்துள்ளவர்கள், எவ்வளவு தாராளமாகி விடுகிறார்கள் பார்த்தாயா?"

ஆனால் ஒரு நாட்டை ஆளும் அரசர் தம்முடைய பிரஜைகள் அனுசரிக்கும் சமயங்கள் எல்லாவற்றையும் ஆதரித்துப் பராமரிக்க வேண்டும். இந்த உண்மையை யாருடைய தூண்டுதலுமில்லாமல் இளவரசர் தாமே உணர்ந்திருக்கிறார். சந்தர்ப்பம் கிடைத்ததும் காரியத்திலும் செய்து காட்டுகிறார். திருமலை, இதைக் கேள்! நம் இளவரசர் அருள்மொழிவர்மருடைய கரங்களில் சங்கு சக்கர ரேகை இருப்பதாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன், நீயும் கேட்டிருப்பாய். ஆனால் அவருடைய கரங்களை நீட்டச் சொல்லி நான் பார்த்ததில்லை. அவர் கையில் சங்கு சக்கர ரேகை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஒன்று நிச்சயமாக சொல்

"சில நாளைக்கு முன்னால் பொதிகைமலைச் சிகரத்தில் ஒரு தவயோகியைப் பார்த்தேன் அவர் ஞானக்கண் படைத்த மகான். அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'யானைக்கு ஒரு காலம் வந்தால், பூனைக்கு ஒரு காலம் வரும். இப்போது தென்னாடு மேம்பாடு அடையும் காலம் வந்திருக்கிறது. வெகுகாலமாக இப்புண்ணிய பாரத பூமியில் பெரிய பெரிய சக்கரவர்த்திகளும், வீராதி வீரர்களும், ஞானப் பெருஞ் செல்வர்களும், மகா கவிஞர்களும் வடநாட்டிலேயே அவதரித்து வந்தார்கள். ஆனால் வடநாட்டைச் சீக்கிரம் கிரகணம் பிடிக்கப் போகிறது. இமயமலைக்கு அப்பாலிருந்து ஒரு மகா முரட்டுச் சாதியார் வந்து வடநாட்டைச் சின்னா பின்னம் செய்வார்கள். கோயில்களையும், விக்கிரகங்களையும் உடைத்துப் போடுவார்கள். ஸநாதன தர்மம் பேராபத்துக்கும் உள்ளாகும். அப்போது நமது தர்மம், வேதசாஸ்திரம், கோயில், வழிபாடு ஆகியவற்றையெல்லாம் தென்னாடுதான் காப்பாற்றித் தரப்போகிறது. வீராதி வீரர்களான சக்கரவர்த்திகள் இத்தென்னாட்டில் தோன்றி, நாலு திசைகளிலும் ஆட்சி செலுத்துவார்கள். மகாஞானிகளும், பண்டிதோத்தமர்களும், பக்த சிரோமணிகளும் இத்தென்னாட்டில் அவதரிப்பார்கள்!' என்று இவ்விதம் அந்தப் பொதிகை மலைச் சிவயோகி அருளினார். அந்த யோகியின் தீர்க்க தரிசனம் உண்மையாகும் என்ற நம்பிக்கை எனக்கு இப்போது பிறந்திருக்கிறது, திருமலை!'

"சுவாமி! தாங்கள் ஏதேதோ ஆகாசக் கோட்டைகள் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அங்கே இராஜ்யத்தின் அஸ்திவாரத்தையே தகர்த்தெறியப் பார்க்கிறார்கள் குரு தேவரே! நான் பார்த்ததையெல்லாம் தாங்கள் பார்த்து நான் கேட்டதையெல்லாம் தாங்களும் கேட்டிருந்தால் இவ்வளவு குதூகலமாயிருக்க மாட்டீர்கள். இந்தச் சோழ சாம்ராஜ்யத்துக்கு ஏற்படப்போகும் அபாயத்தை நினைத்துக் கதிகலங்குவீர்கள்"

"திருமலை, ஆம், நான் மறந்துவிட்டேன். அதிக உற்சாகம் என் அறிவை மூடிவிட்டது. நீ உன் பிரயாணத்தில் தெரிந்து வந்த செய்திகளை இன்னும் நான் கேட்கவே இல்லை. சொல், கேட்கிறேன். எவ்வளவு பயங்கரமான செய்திகளாயிருந்தாலும் தயங்காமல் சொல்!"

"சுவாமி, இங்கேயே சொல்லும்படி ஆக்ஞாபிக்கிறீர்களா? நான் கொண்டுவந்த செய்திகளை வாயு பகவான் கேட்டால் நடுங்குவார் சமுத்திரராஜன் கேட்டால் ஸ்தம்பித்து நிற்பார் பட்சிகள் கேட்டால் பறக்கும் சக்தியை இழந்து சுருண்டுவிடும் ஆகாசவாணியும், பூமாதேவியுங்கூட அலறிவிடுவார்கள். அப்படிப்பட்ட செய்திகளை இங்கே பகிரங்கமாகச் சொல்லும்படியா பணிக்கிறீர்கள்?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அப்படியானால் வா! காற்றும், கனலும் புகாத பாதாளக் குகை ஒன்று இந்தத் தீவிலே இருக்கிறது.

(தொடரும்...)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

### கோபத்தைக் கையாளுதல்

கோபம் என்பது தீய பண்பா?
ஒரு போதுமே கோபம் வராதவர் யாருமுண்டா?

கோபம் பொதுவாக எல்லோருக்குமே ஏற்படுகின்ற ஒன்றாகும். கோபம் என்பதைத் தீய பண்பு என்றே பலர் கருதுகின்றார்கள். ஒவ்வொரு உயிரியும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் கோபப்படுகின்றது. கோபம் ஏற்படும் போது அதனை வெளிப்படுத்தும் முறைகள் (அல்லது வெளிப்படுத்தாமல் அடக்கி வைத்திருத்தல்) ஆரோக்கியமற்ற விளைவுகளை உருவாக்கும் வேளையில் கோபம் ஒருதீய மறையான பண்பாகக் கருதி வெறுக்கப்படுகிறது.

பிறரை துன்புறுத்தாத கோபம் ஓரளவு ஆரோக்கியமானது. கோபத்தை ஆரம்பித்திலேயே இனங்கண்டு அதிலிருந்து நம்மைக் காத்துப் பிறரையும் காப்பது அவசியம்.

**கையாளும் முறை**

- கோபம் வரும் வேளையில் கண்ணாடியைப் பார்த்தல்
- அவ்விடத்தை விட்டு விலகல்.
- எண்களை மேலிருந்து கீழாக எண்ணுதல்.
- தண்ணீர் குடித்தல்
- துணி துவைத்தல்.

ஆ.ஜசிந்தா

## சிரிப்பு

ஓயாமல் சிரிப்பவன்- பைத்தியக்காரன்
ஓடவிட்டுச் சிரிப்பவன்- வஞ்சகன்
இடம்பார்த்துச் சிரிப்பவன் - எத்தன்
இருக்குமிடமெல்லாம் சிரிப்பவன் - கோமாளி
கற்பனையில் சிரிப்பவன் - கவிஞன்
கண்பார்த்துச் சிரிப்பவன் - காரியவாதி
தெரியும் எனச் சிரிப்பவன் - நடிகன்
தெரியாது என்று சிரிப்பவன் - பசப்பாளி
நீதியோடு சிரிப்பவன் - அறிஞன்
நிலை மறந்து சிரிப்பவன் - காதலன்
மகிமையில் சிரிப்பவன் - மன்னன்
மாண்பில் சிரிப்பவன் - பண்பானவன்
குழைந்து சிரிப்பவன் - சந்தர்ப்பவாதி
கூட்டத்தில் சிரிப்பவன் - அரசியல் வாதி
இன்பத்தில் சிரிப்பவன் - ஏமாளி

யே.ஷியானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல காரியங்களைச் செய்ய ஒருபோதும் பயப்படாதீர்கள்! தாமதம் இன்றி உடனே நல்ல காரியங்களைச் செய்யுங்கள்!

~ நெப்போலியன் ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பதின்ம வயதினர் குறித்த மருத்துவ நிபுணரின் எச்சரிக்கை

இலங்கையில் பதின்ம வயதினரில் 40 சதவீதமானவர்கள் மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தாய் – சேய் குடும்ப சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ நிபுணர் சித்திரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

பதின்ம வயதினரிடையே ஏற்படும் தனிமை, மனக் குழப்பங்கள், மன அழுத்தங்கள், எரிச்சல்கள் மற்றும் கோபங்கள் போன்றவை காரணமாக மனநலப் பாதிப்புகள் ஏற்படுவதாகக் குறிப்பிட்டுள்ள மருத்துவ நிபுணர்; இந்த மனநலப் பாதிப்பின் உச்சகட்டமே தற்கொலை எனக் கருத்துரைத்துள்ளார்.

ஆய்வுகளின் அடிப்படையில் மருத்துவ நிபுணர் கூறிய விடயத்தை எவரும் உதாசீனம் செய்துவிட முடியாது.

ஏனெனில் சமகாலத்தில் பதின்ம வயதினரிடையே தற்கொலை மரணங்கள் அதிகரித்து வருவது வெளிப்படை.

உண்மையில் தற்கொலை என்பது தன்னம்பிக்கையில் ஏற்படுகின்ற பலவீனம் காரணமாக ஏற்படுவதாக இருக்கின்ற போதிலும் அந்தத் தன்னம்பிக்கைக் குறைவுக்கு அல்லது தன்னம்பிக்கை இல்லாத மனநிலைக்குக் காரணம் என்ன என்று ஆராயும்போதுதான் மருத்துவ நிபுணர் கூறிய தனிமை, அரவணைப்பு இல்லாத நிலைமை, பெற்றோர்களின் நச்சரிப்பு, பரீட்சை பதகளிப்பு உள்ளிட்ட விடயங்கள் மேலெழுகின்றன.

உண்மை. இலங்கை போன்ற வறிய நாடுகளில் பொருளாதாரத் தேவை என்பது முதன்மைக்குரியதாக ஆகிவிட்டது.

இதன் காரணமாக தந்தையும் தாயும் வேலை செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலை; பிள்ளைகள் மீதான பெற்றோர்களின் கருசனையை, அவதானிப்பைக் கணிசமாகக் குறைத்துள்ளது.

இதனால் பிள்ளைகள் தனிமையில் இருக்கின்ற நிலைமைகள் ஏற்படுகின்றன.

இதுதவிர இலங்கையின் கல்விக் கொள்கை என்பது பிள்ளைகளை வதைப்பதாகவே இருக்கின்றது.

ஆம், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையினூடாக மாணவர் வதை படலம் தொடங்குகிறது.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாவிட்டால், எதிர்காலமே இல்லாமல் போய்விடும் என்பது போன்ற பிரமை நோய்க்கு உட்பட்ட பெற்றோர்கள் பிள்ளைகளை சதா நச்சரிக்க, அந்தப் பிஞ்சுகள் உள ரீதியில் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர்.

இதன் நீட்சியாக மனநலப் பாதிப்புகள் தலைதூக்குகின்றன.

இருந்தும் இது தொடர்பில் எவரும் கவனம் செலுத்துவதாக இல்லை.

எனவே பெற்றோர்கள் தங்களின் வரட்டுக் கௌரவங்களை கைவிட்டு பிள்ளைகளின் உடல், உள, சமூக, ஆத்மீக நலன்களில் கவனம் செலுத்தி தமது பிள்ளைகள் மகிழ்ச்சியானவர்களாக – மக்கள் சமூகத்துடன் இசைந்து வாழக்கூடியவர்களாக ஆக்க வேண்டும்.

அதுவொன்றுதான் பிள்ளைகளைப் பாதுகாக்கும்.

## சிசுவினை கொலை செய்த நபருக்கு 5 வருடகால கடூழிய சிறை

(கண்டாவளை)

முல்லைத்தீவு புதுக்குடியி ருப்பு பகுதியில் பிறந்து ஒரு நாள் வயதுடைய சிசுவை கொலை செய்த பெண்ணுக்கு ஐந்து வருடகால கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன் பத்தாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு பகுதியில் கடந்த 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3ஆம் திகதியன்று பிறந்து ஒரு நாள் வயது டைய குழந்தை ஒன்றினை கொலை செய்த குற்றச்சாட்டில் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யுப்பட்டு முல்லை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்ட நிலையில் குறித்த வழக்கானது கிளிநொச்சி மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில் குறித்த வழக்கானது கடந்த வாரம் கிளிநொச்சி மேல் நீதிமன்றில் மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.ஏ சகாப்தீன் அவர்கள் முன்னிலையில் தீர்ப்புகாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சிசுவைக் கொலைசெய்த குற்றத்திறகாக ஐந்து வருட கடூழிய சிறைத் தண்டணை விதிக்கப்பட்டதுடன் பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் தவறும் பட்சத்தில் 12 மாத கால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (5-6-315)

## வேரவில் விபத்து சாரதிக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி வேரவில் பகுதியில் உழவு இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி ஒருவர் உயிரிழந்த சம்பவத்து டன் தொடர்புபட்ட உழவு இயந்திர சாரதியினை எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதி மன்றம் உத்திரவிட்டுள்ளது.

குறித்த இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும். ஜெயபுரம் பொலிஸார் உழவு இயந்திரத்தின் சாரதியை கைது செய்து நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதிவான் ஜெ. சுபராஜினி முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த உழவு இயந்திரத்தின் சாரதியான சந்தேகநபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது. (5-6-315)

## மாற்றுத்திறனாளிகள் மீது இலக்கு வைத்து நிதி திரட்டும் கும்பல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்காக பணம் சேகரிப்பதாக கூறி வெளிநாட்டில் பண சேகரிக்கும் கும்பல் தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மருத்துவ மனைக்கு என வெளிநாடுகளில் கலை நிகழ்வுகள் என்ற பெயரிலும் விளையாட்டு நிகழ்வுகள் என்ற பெயரிலும்பல லட்சம்பணம் சேகரிக்கப்பட்ட போதிலும் அவற்றில் சிறிய அளவிலான பணமே மருத்துவ மனைக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதாகவும் மிகுதி பணம் தொடர்பில் உரிய பதில் எதுவும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மன்னாரில் சில மாற்றுத்திறனாளிளை பயன்படுத்தி சொத்துக்களை சேர்க்கும், கும்பலுடன் இணைந்து வெளிநாடுகளில் மன்னார் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் என்ற பெயரில் பாரிய பண சேகரிப்பில் குறித்த அமைப்பு ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் மக்களை அவதானமாக செயற்படுமாறு மன்னாரை சேர்ந்த புலம்பெயர் அமைப்பு அறிவித்துள்ளது. (5-6-285)

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பாவனையில் இல்லாத அலுவலகப் பொருட்கள், இலத்திரனியல் பொருட்கள், பழுதடைந்த மற்றும் சேதமடைந்த நிலையிலு ள்ள அலுவலகப் பொருட் கள் / இலத்திரனியல் பொருட்கள் ஆகியன எதிர்வரும் 21.10.2023 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பருத்தித்துற்ற நீதிவான் நீதி மன்ற வளா கத்தில் வைத்து பிராந்திய ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

என பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (5-6)

## முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலா சாலை முத்தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை ரதிலட் சுமி மண்டபத்தில் சங்கீத பூஷணம் பூத்தகொடி புகழ் செ.குமாரசாமி அரங்கில் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில் பிரதம விருந் தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவபாலன் குணபாலன், சிறப்பு விருந்தினராக துணுக்காய் வலய அழகியல் கல்வி உதவி கல்வி பணிப்பாளர் நாகரட்ணம் இராஜன், கௌரவ விருந்தினர்களாக ழகரம் அறக்கட்டளை பொ.பிரசாந்தன் குடத்தனை அ.த.க பாடசாலை ஆசி ரியை பாரத் வீணாவாஹினி, வேலுப்பிள்ளை அறக்கட்டளையைச் சேர்ந்த வே.கஜேந்திரன் ஆகியோர் விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

முத்தமிழ் விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு மற்றும் ஆசிரிய மாணவர்களின் நடனம் வில்லிசை நாடகம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (5-6-33)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** இராசபுரம் (லைக்கா கிராமம்), சின்ன அடம்பன் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** எல்லப்பர் மருதங்குளம், ஆச்சிபுரம், ஆசிக்குளம், கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம் மாதா கோவிலடி, கோவில்குளம் 10 ஆம் ஒழுங்கை, மதுரநகர் கல்நாட்டின குளம், பெரியகூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம், மகாறம்பை குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## கசிப்புடன் ஒருவர் கைது

(அராலி)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கற்கோவளம் பகுதியில் 10 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் நேற்று முன் தினம் 47 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன் துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட தையடுத்து அவரை நீதிமன்றத்தில் முற் படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

14

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



குலோத்துங்க சோழனுக்குப்பின் சிங்கள மன்னர்களாகிய முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரம பாகு ஆகியோர் காலத்தில் யாழ்ப் பாண அரசின் நிலையைப் பற்றிய செய்தி எதுவும் நன்கு தெரிய வில்லை.

இவ்விரு மன்னர் காலத்தும், இலங்கை முழுவதும், ஒரு முடிக் கீழ் இருந்து வந்தது எனினும் வட இலங்கையில், பராக்கிரமபாகு வின் ஆட்சிக் காலத்திலும் உரி மைப் போர் நடைபெறாமலில்லை. பராக்கிரமப ாகு அரசுகட்டிலேறிய பதினாறாமாண்டிலே (கி. பி. 1168 - 1169) மாதோட்டப் பகுதியில் வாழ்ந்த தமிழர் இவ்வரசனின் ஆட்சிக்குக்கீழ் அடங்கி வாழ்வ திலும் இறந்து படுதலே நன்றெனத் துணிந்து புரட்சிக்கொடி உயர்த் தினர். இப்புரட்சியினை யடக்க, வலிமிக்க மன்னனாகிய முதலாம் பராக்கிரமபாகு தன் ஆணைக் குட்பட்ட நாற்பெரும் படைகளையும் மாதோட்டத்திற்கு அனுப்பவேண் டிய நெருக்கடி ஏற்பட்டது. இவ்வாறு சூளவம்சம் கூறும். அஃதவ்வா றாயின் அப்புரட்சி எத்தனை வலிபடைத்ததாய் இருந்திருத்தல் வேண்டும்.?

முதலாம் பராக்கிரமபாகுவிற்குப் பின் இலங்கையில் அரசுரிமை பற்றிய குழப்பங்கள் இருந்தமை யால் அங்கு நிலையான ஆட்சி இருக்கவில்லை. அவனுக்குப்பின் தளபதிகள் பலர் நாட்டை ஆண்டு வந்தனர். இதற்கிடையில் பாண்டிய பரம்பரையில் இருந்து வந்து சிங் கள அரச குடும்பத்தோடு தொடர்பு பூண்டிருந்த பராக்கிரம பாண்டி யன் என்பானும் சில காலம் ஆண் டான்.

இவ்வாறு பராக்கிரம பாண்டி யன் அரசாளுகையில் கலிங்க தேசத்திலிருந்து கேரளப் படையு டன் மாகன் என்பான் சிங்கள அரசுக்கு உரிமைகோரி வட இலங் கையில் வந்து இறங்கினான். இவன் செயவாகு என்பவனோடு சேர்ந்து முதல் வட இலங்கை முழுவதையும் தன் ஆணைக்குள் அடக்கிக் கோட்டை கொத்தளங்கள் அமைத்தனன். "கொட்டசார", கங்காதளாக, காகாலய, பதீ, குறு ந்தி, மனாமத்த, மாகிந்த, மன் னார், பலச்சேரித்துறை, வாலிகா கம, கோண, கோனுசு, மதுபாத வதித்த சூகரதித்த ஆகிய இடங் களில் அரண்கள் அமைத்து வட இலங்கை முழுவதையும் பல்லா ண்டுகள் ஆண்டு வந்தனர். அதன் பின் புலத்திநகர் என்ற பொலந றுவையைக் கைப்பற்றி அதனைத் தனது தலைநகராக்கினான். இவன் காலம் கி.பி 1215 - 1235 ஆகும்.

இவனது ஆட்சிக்காலம் தொடக் கம் இலங்கையில் தமிழரசு வலியு றத் தொடங்கியது. புத்தளத்திலிருந்து திருகோணமலை வரைக்கும் ஒரு கோடு கிழித்தால் அக்கோட்டின் வடக்குப் பாகம் முழுவதும் தமிழ் இராச்சியமாக அமைந்திருந்த தென் பது மேற் கூறியவற்றால் விளங்கும். அன்றியும் தமிழர் ஆதிக்கமும் அவர்தம் அரசியற் செல்வாக்கும் "மாயரட்டை" எனப்படும் நீர்கொ மும்பு சிலாபப் பகுதி வரையும் பரந்தது.

அதன் பின் பண்டித பராக்கிர மபாகு என்னும் இரண்டாம் பராக்கி ரமபாகு (கி. பி. 1236 - 1271) அரசினைக் கைப்பற்றினான். எனி னும் வட இலங்கையில் நிறுவப்பட்ட தமிழரசினை அவனால் அடக்க முடியாது போயிற்று. இப்பராக்கிர மபாகு காலத்தில் (கி. பி. 1244) மலாய தீபகற்பத்துத் தாம்பிறலிங்கம் என்னும் பகுதியை ஆண்ட புத்த அரசன் சந்திரபானு என்பான் அற்பு தங்கள் நிகழ்த்தக் கூடிய புத்தசிலை ஒன்று இலங்கையில் இருப்பதாகக் கேள்விப்பட்டு அதனைக் கைப்பற் றும் நோக்கமாக இலங்கைக்குப் படையெடுத்து வந்தான். அப்பொழுது சிங்களப் படை இவனை முறியடித் தது. இவன் மீண்டும் நான்காம் விஜயபாகு (கி. பி. 1271 - 1273) காலத்தில் படையெடுத்து வந்து வட இலங்கையிலுள்ள மாதோட்டத்தில் இறங்கினான். அங்கிருந்து வடக்கு நோக்கிச் சென்று சில இடங்களில் பாடிபோட்டிருந்தான். அவனுடைய சாவகப்படை தங்கியிருந்தபடியா லேயே சாவகச்சேரி, நாவற்குழியி லுள்ள சாவகன்கோட்டை ஆகிய இடங்கள் இப்பெயர்களைப் பெற்றன என்பர்.

இக்கலகம் அடங்கியபின்னர் யாப்பகுவையிலிருந்து அரசோச்சிய நான்காம் விஜயபாகு காடடர்ந்து கிடந்த அனுராதபுரத்துக்கு வந்து அந்நகரிலுள்ள புத்தகோயில்களைத் திருத்துவித்தான். இக்காலத்தில் வன்னிப்பகுதி தமிழ்ச் சிற்றரசனின் கீழ் இருந்து வந்தது. குறிப்பிட்ட சிங்கள அரசன், இச்சிற்றிரசர் கையில், அனுராதபுரத்தைப் பாது காக்கும் பொறுப்பை ஒப்படைத்தான்.

இது இவ்வாறிருக்க கி. பி. 1216 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தென்னிந்தியாவில் இரண்டாம் பாண்டியப் பேரரசு உருப்பெறத் தொடங்கியது. இப்பேரரசு சடாவர்மன் சுந்தர பாண்டியன் (கி. பி. 1253 - 1270) காலத்தில் உயர்நிலை யடைந்தது. சடாவர்மன் இலங்கைக்குப் படையெடுத்துவந்து சிங்கள அரசனை வென்று திறை கொண்டு சென்றான். இப்பாண்டியன் ஈட்டிய வெற்றியைக் குறித்துப் புத்தசரித்திர நூலாகிய சூளவம்சம் எதுவும் கூ[illegible] நிற்கும்.

சுந்தரபாண்டியன் வெற்றிகளி லும் கீர்த்திப் பிரவாகங்களிலும் நெருங்கிய தொடர்பு கொண்டவ னாகிய அவன் மகன் சடாவர்மன் வீரபாண்டியன் (கி பி 1253 - 1268) இலங்கையைப் பாண்டிய சாம் ராச்சியத்தினுள் அடக்கும் பொருட்டு பூநகரிக்கு அண்மையில் வந்திறங் கினான். அவன் வந்திறங்கிய இடத்தை இன்றும் வீரபாண்டியன் முனை என அழைப்பர். தனது படையை எதிர்த்த அங்குள்ள அர சனைக் கொள்றொழித்தபின், பொல நறுவைக்குப் போகும் அரசப் பெருந் தெருவழியாகச் சென்று திருகோண மலையையடைந்தான். அங்கு தன் வெற்றிக்கு அறிகுறியாகப் பாண்டிய சின்னமான இருமீன் முத்திரை யைப் பொறித்து மீனக் கொடியையும் உயர்த்தினான். இவன் வெற்றிச் செலவினையறிந்த சிங்கள மன்ன னாகிய இரண்டாம் பராக்கிரமவாகு அடிபணிந்து திறை கொடுத்தான். வீரபாண்டியன் பொறித்த வெற்றிச் சின்னத்தை "விறுடறிக்கு" கோட்டை 24 வாயிலில் இன்றும் காணலாம்.

பின்பு பாண்டி நாட்டில் மாறவர் மன் குலசேகரன் (கி. பி 1268 - 1301) பட்டத்திற்கு வந்ததும் இலங் கைக்குத் தளபதியாக "ஆரியச்சக்கர வர்த்தி" என்னுந் தண்டத் தலை வனை அனுப்பினான். அவன் நாட்டை மேற்பார்வை இட்டுக்கொண்டு வடஇலங்கையிலேயே தங்கினான். இவனிலிருந்தே யாழ்ப்பாணத் தெழுந்த புதிய அரச பரம்பரை தோன்றியிருத்தல் வேண்டும். இவனுக்குப்பின் வந்த யாழ்ப்பா ணத்து மன்னர் யாவரும் "ஆரியச் சக்கரவர்த்தி" என்னும் அரசபட்டப் பெயரைக் கொண்டு விளங்கினர். இவ்வாறு இந்நூல் கூறுகிறது.

சரித்திரகாலத்துக்கு முந்திய யாழ்ப்பாணத்தைப்பற்றி "இலங் கைச் சுருக்க வரலாறு" என்னும் நூலிலிருந்து.....

செங்கை ஆழியான் என்ற புனை பெயரால் பரவலாக அறியப்படும் க.குணராசா எழுதிய இலங்கைச் சுருக்க வரலாறு என்னும் நூலில் கி.மு 6ஆம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணத்து வரலாற்றைப் பின் வருமாறு கூறுகிறார்.

இலங்கையின் வடபிரதேசம் யாழ்ப்பாண இராச்சியமென 13 ஆம் நூற்றாண்டிலேயே அழைக்கப்ப டலாயிற்று. அதற்கு முன் நாகதீபம், உத்தரதேசம், சிங்கைநகர், தெமிழ பட்டினம், மணற்றி எனப்பலவாறாக அழைக்கப்பட்டு வந்தது. இப் பிர தேசம் இடையிடையே அனுராத புரச் சிங்கள மன்னர்களது. ஆட்சி யினுள் அடங்கி இருந்துள்ளது.

கி.மு 1 ஆம் நூற்றாண்டில் வட இலங்கை மீது சிங்களப் படை யெடுப்பொன்று நிகழ்ந்திருக்க வேண்டும். கிபி1 ஆம் நூற்றாண் டில் அனுராதபுரத்திலிருந்து இலங் கையை ஆட்சி செலுத்திய வசபன் உத்தரதேசத்தை ஆண்டுள்ளான். கிமு 3 ஆம் நூற்றாண்டிலிருந்து கிபி 1 ஆம் நூற்றாண்டு வரைவட இலங்கையில் பெரும்பாலும் சிங் கள மன்னர்களது ஆதிக்கம் நில வியது. கிபி 2 ஆம் நூற்றாண்டில் மகல்லக்நாகன் (கி.பி. 135-141) என்ற மன்னனும், கனித்ததீசன் (கி.பி. 165 - 193) என்ற சிங்கள மன்னனும், அதன் பின்னா கிபி 3 ஆம் நூற்றாண்டில் வோகாரிக்க தீசன் (கி.பி. 215 - 236). 7 ஆம் நூற்றாண்டில் இரண்டாம் அக்க போதி (கி.பி. 608 - 618), சிலா மேகவண்ணன் (கி.பி. 623 - 632) ஆகிய சிங்கள மன்னர்க ளும் ஆதிக்கம் செலுத்தியுள்ள னர்?.

கிபி 785 இல் உத்தரதேசத்தின் முதல்தமிழ் மன்னனாக உக்கிர சிங்கன் முடிபுனைந்தான் அவன் உத்தரதேசத்தின் தலைநகரை பூநகரிசிங்கை நகருக்கு மாற்றிக் கொண்டான். உக்கிரசிங்கனின் மகன் ஜெயதுங்கன் சிங்கை நகரி லிருந்து ஆண்டபோது, தென்னிந் தியாவிலிருந்து சிறீமாற சிறீவல் லபன் என்ற பாண்டியனின் படை யெடுப்பு (கிபி 815-862) நிகழ்ந்தது. அவன் உத்தரதேசத்தை வெற்றி கொண்டு திறைபெற்றுச் சென் றான். 9 ஆம் நூற்றாண்டில் 2ஆம் கசபன் என்ற சிங்கள மன்னனின் ஆதிக்கத்தின் கீழும் 10 ஆம் நூற் றாண்டில் 4 ஆம் மகிந்தனின் ஆதிக்கத்தின் கீழும் உத்தர தேசம் உட்பட்டிருந்தது.

பின்னர் உருகுணை தவிர்ந்த இலங்கையின் பிற பாகங்கள் சோழரின் ஆட்சிக்குட்பட்டன. சோழரால் நியமிக்கப்பட்ட அரசுப் பிரதிநிதிகள் உத்தரதேசத்தை நிர்வகித்துவந்தனர். கிபி 948 இல் உத்தரதேசத்தை புவனேகவாகு அல்லது புவனேசவாசர் என்பவர் சிங்கை நகரிலிருந்து நிர்வகித்தாக அறியலாம். கி.பி 10 ஆம் நூற் றாண்டில் பூநகரிப் பிரதேசம் சோழரின் ஆதிக்கத்தில் இருந்தது என்பதற்கு ஆதாரங்களுள்ளன. அவ்வேளையில் அப் பிரதேசத்தின் சோழப் பிரதிநிதியாக விருந்த புவனேகவாகு, பூநரியில் இன்று நல்லூர் என்று விளங்குகின்ற பகுதியில் தனது மாளிகை அமை த்திருக்க வேண்டும்?. உண்மை யில் இன்று கிடைக்கின்ற ஆதா ரங்களிலிருந்து பூநகரியில் இருக் கின்ற நல்லூரே தமிழர் அரசில் புராதன நல்லூராகும் எனக்கொ ள்வதில் தவறில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயதொழில்...

அனுபா பாஸ்குவல் தெரிவித்துள்ளார்.

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு நிதியமைச்சிடம் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (7)

## நாட்டில்...

மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

புத்தளம் பிரதேசத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், எந்த அளவான அரிசி கையிருப்புகளை மறைத்து வைத்தாலும் கட்டுப்பாட்டு விலைக்கு மேல் அரிசியை விற்பனை செய்ய அனுமதிக்க மாட்டோம் எனத் தெரிவித்தார்.

"எங்களுக்கு (நாட்டுக்கு) அரிசி தட்டுப்பாடு இல்லை. இந்த போகத்தில் போதிய அறுவடை கிடைத்துள்ளது என்பது வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் தெரியும். இதை, ஐந்து மாதங்களுக்கு பயன்படுத்த முடியும் என்பதால், விவசாயிகள் வீடுகளில் வைத்துள்ளனர். மேலும் ஆலை உரிமையாளர்கள் இவற்றை ஆலைகளில் வைத்துள்ளனர். அதனால் தான் இந்த சிறு பற்றாக்குறை உருவாகிறது.

ஆனால் நாட்டுக்குத் தேவையான அரிசியின் அளவு. அதாவது நம் அனைவருக்கும் தேவையான அரிசி இருக்கிறது. பாஸ்மதியை மாத்திரமே வெளிநாட்டில் இருந்து கொண்டு வர வேண்டும். கீரி சம்பாவுக்கு ஓரளவு தட்டுப்பாடு உள்ளது.

எனினும் மற்றைய அரிசி வகைகள் போதுமான அளவு உள்ளன.

ஆகவே எவ்வளவு மறைத்தாலும் சாதாரண நிலை அரிசி கட்டுப்பாட்டு விலையை தாண்டிச் செல்ல அனுமதிக்க மாட்டோம். அது கட்டுப்பாட்டு விலைக்கு கீழே பராமரிக்கப்படும் என அவர் உறுதிபடத் தெரிவித்தார். (7)

## ஒரே பிரசவத்தில்...

பிறந்துள்ளன.

இதனை வைத்தியசாலையின் பணிப்பாளர் அஜித் தத்தநாராயண உறுதிப்படுத்தியதோடு ஆறு குழந்தைகளும் நலமுடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கையில் கடைசியாக 2021ஆம் ஆண்டு ஒக்ரோபர் 2ஆம் திகதி ஆறு குழந்தைகள் பிறந்தன.

எனினும் அந்த ஆறு குழந்தைகளில் மூவர் ஆண்கள், மூவர் பெண்கள். ஆனால் ஆறு குழந்தைகளும் ஆண் குழந்தைகளாகப் பிறந்தமை இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ஈஸ்டர் தாக்குதல்...

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் கருத்து வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன், பாதுகாப்பு ஆலோசகர் பேராசிரியர் ரொஹான் குணரத்ன, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகள் மேற் கொண்ட சில முக்கிய கோப்புகளை விசாரணைகளுக்காக ஒப்படைக்க முடியாதென ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கைகளை ஒருபோதும் வெளியில் வழங்க முடியாது எனவும் கூறுகிறார். நான் நியமித்திருந்த சில ஆணைக்குழுக்களின் தலைவர்கள் தமது விசாரணை அறிக்கைகளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்ததுடன், அதற்கு மேலதிகமாகவும் சில இரகசிய கோப்புக்களையும் அவரிடம் கையளித்துள்ளனர்.

அந்த இரகசிய கோப்புக்களை குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கும், பொலிஸாருக்கும் வழங்க வேண்டாமெனவும் தனிப்பட்ட ரீதியில் வைத்துக்கொள்ளுமாறும் கோட்டாபயவிடம் கூறியுள்ளனர்.

பாதுகாப்பு ஆலோசகர் பேராசியர் ரொஹான் குணரத்ன, ஒருபுறம் தம்மிடம் உள்ள கோவைகளை, இரகசியமானவை, அவற்றை விசாரணைகளுக்கு கையளிக்க முடியாதென கூறுவதுடன், மறுபுறம் கோட்டாவிடம் இரகசிய கோப்புகளை வழங்கியுள்ளார்.

ஆகவே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து விசாரணைகளும் பொய்யானவை. அவை பக்கச் சார்பானவையாகும். எந்தவொரு விசாரணை அறிக்கையும் முழுமையானவை அல்ல என்றார். (ந-7)

## உயர்மட்ட...

களவிஜயம் மேற்கொண்டு குறித்த பகுதிகளை பார்வையிட்டுள்ளார்கள்.

புத்தசாசன அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன, ஜனாதிபதி செயலக வடமாகாண இணைப்பாளர் எல்.இளங்கோவன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர், தொல்பொருள் திணைக்கள உயர் அதிகாரிகள் மற்றும் வனவள திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், காணி தொடர்பிலான திணைக்களம், கமநலசேவை திணைக்களம், விவசாய திணைக்களம் உள்ளிட்ட அரச அமைப்புகளின் உயர் அதிகாரிகள் அங்கு பயணம் மேற்கொண்டு கள ஆய்வினை மேற்கொண்டுள்ளார்கள்.

கடந்த மாத இறுதியில் குருந்தூர் ரஜமஹா விகாரை அமைந்துள்ள தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தமில்லாத காணியில் இருந்து 3 ஏக்கர் காணியை ஒதுக்குமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன முன்மொழிந்துள்ளார்.

பௌத்த விகாரை மற்றும் இந்து ஆலயம் மற்றும் பொது வசதிகளுக்கான கட்டங்களை அமைப்பதற்கு இந்தக் காணியை ஒதுக்குமாறு, இளைஞர் பாரம்பரியம் பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழுவிற்கு அவர் முன்மொழிந்திருந்தார்.

இதனையடுத்து அரச உயர் அதிகாரிகள் நேற்று களவிஜயம் மேற்கொண்டு குருந்தூர்மலையினை பார்வையிட்டுள்ளதுடன் குருந்தூர் குளம் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தினால் எல்லைப் படுத்தப்பட்ட பகுதிகளையும்பார்வையிட்டுள்ளனர்.

குருந்தூர்மலையில் தொல்பொருள் திணைக்களம் தமிழ்மக்களின் பூர்வீக காணிகளை எல்லைப் படுத்தியுள்ளதாக விவசாயிகள்பல்வேறு தடவைகள்முறையிட்டுள்ளனர். மலையினை அண்டிய தமிழ்மக்களின் பூர்வீக காணிகளில் எதுவும் செய்யமுடியாத நிலை காணப்படுவதாகவும் தொல்பொருள் திணைக்களமும் வனவளத் திணைக்களமும் தங்கள் காணிகளை எல்லைப் படுத்தியுள்ளநிலையில் மீள்குடியேற்றத்திற்கு பின்னர் குறிப்பாக 2012 ஆம் ஆண்டு தொடக்கம் மக்கள் விவசாய செய்கையினை யோ மீள்குடியேற்றத்தினை யோ செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7,09)

## டிஜிட்டல்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஹுவாவிநிறுவனத்துக்கும்இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று நேற்று கைச்சாத் திடப்பட்டது.

சீனாவிற்கு சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பீஜிங்நகரிலுள்ள ஹுவாவி நிறுவனத்தின் ஆய்வு, அபிவிருத்திக்கான மத்திய நிலையத்திற்கு சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டபோதே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இச்சுற்றுப் பயணத்தின் போது ஹுவாவி நிறுவனத்தின் பிரதி தலைவர் Simon Lin ஐ ஜனாதிபதி சந்தித் துள்ளார்.

இலங்கையில் மென்பொருள், வன்பொருள் பொறியியலாளர்களை வருடாந்தம் உருவாக்குவதற்கான கற்பித்தல் வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க தயாரென ஹுவாவி நிறுவனத்தின் பிரதி தலைவர் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்துரைத்த ஜனாதிபதி, இலங்கையின் எதிர்காலம் தொடர்பில் கலந்தாலோசிக்கவே இம்முறை சீனாவுக்கு வருகை தந்திருப்பதாகவும், டிஜிட்டல் கல்வி முறைமை, பசுமை வலுச்சக்தி உற்பத்தி தொடர்பில் சீன அரசாங்கம், ஹுவாவி நிறுவனத்தின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானதெனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (7)


தன நிதானய
திகதி - 2023.10.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1300
I 10 14 45 70 I
15763

லக்கி 7
திகதி 17.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0096
L7 இலக்கம் 2 7
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 1 1 4 6 5 8

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.17
சீட்டிழுப்பு இலக்கம் 579
கன்னி 01 02 29 54 கன்னி

மஹஜன சம்பத
திகதி 2023/10/17
சீட்டிழுப்பு இலக்கம் 5270
D 9 9 4 5 5 2

மெகா பவர்
திகதி 17/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1618
F 24 28 31 50 64
19218

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3512
சீட்டிழுப்பு திகதி 17.10.2023
E 17 20 28 52
E 51436

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2244 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.10.17 தினம் செவ்வாய்க்கிழமை
26 29 46 49 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,127,120.00

சனிதா
திகதி 2023.10.17 வெற்றி வாரம் 4405 வர்ணம் பச்சை
13 19 23 49 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,925,588.00
01405

சசிறி
வெற்றி வாரம் 390
சீட்டிழுப்பு திகதி 2023.10.17
வெற்றி இலக்கங்கள் 07 29 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,317,880/-

ரஸ்
சீட்டிழுப்பு வாரம் 3956 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.10.17 தினம் செவ்வாய்க்கிழமை
15 19 38 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,919,496/-
740213 316

திகதி 17.10.2023 வெற்றி வாரம் 1420
D 38 34 35 52 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 453,274,824.20
378874 804
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 2070
சீட்டிழுப்பு திகதி: 2023.10.17
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,384,024/-
02 31 38 74 P
191798


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17477)

076 825 7716 (ஆகாஸ்)

# ஜோ பைடன் இன்று இஸ்ரேலுக்கு விஜயம்



இன்று இஸ்ரேலுக்கு செல்ல உள்ளதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கூறியுள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே நடந்து வரும் போர் 11ஆவது நாளை எட்டியிருக்கும் நிலையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இன்று இஸ்ரேல் மற்றும் ஜோர்டானுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில், அமெரிக்காவின் ஆதரவைத் தெரிவிக்கும் வகையில், அதிபர் ஜோ பைடன் இஸ்ரேலுக்கு பயணம் செய்யவிருப்பதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

ஜோர்டானில் நடைபெறும் மாநாட்டிலும் ஜோ பைடன் பங்கேற்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாலஸ்த்தீனம், எகிப்து அதிபர்களையும், ஜோர்டன் மன்னர் அப்துல்லா ஆகியோரையும் பைடன் சந்திக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஹமாசின் போர் தாக்குதலை எதிர்கொண்டு ஒற்றுமையை வலியுறுத்த

(7)

பிறந்தநாள் வாழ்த்து



சிறீசங்கர் - சரணிகா
தம்பதியரின்
செல்வப் புதல்வி
**காருண்யா**
அவர்கள் தனது முதலாவது
பிறந்தநாளை தனது அக்கா
காயுத்திரி அவர்களுடன்
18.10.2023 புதன்கிழமை
இன்று தனது இல்லத்தில்
வெகுவிமரிசையாகக்
கொண்டாடுகிறார்.

வாழ்த்துவோர்:
**சஜீவன் (மாமா),**
**சஞ்ஜேவன் (மாமா)**
இல.103/1, கோயில் வீதி, நல்லூர்.

(C-7444)

# நாடுகளின்...

கலந்துரையாடினார்.

அந்தவகையில் பாகிஸ்தான் பிரதமருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

இதன்போது இன, மத மற்றும் வர்க்க வேறுபாட்டு பிரச்சினைகளுடன் ஒவ்வொருக்கும் இடையிலான வெறுப்புகள், குரோதங்களை தவிர்த்து மனிதாபிமானம் நிறைந்த சமுதாயத்தை கட்டியெழுப்பும் சவாலுக்கு முழு உலகும் முகம்கொடுத்துள்ளமை தொடர்பில் கலந்தாலோசித்தனர்.

பாகிஸ்தான் மற்றும் இலங்கை முகம் கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து மீண்டு வருவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பாகிஸ்தான் பிரதமரும் நீண்ட கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

அதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இந்தோனேஷிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவுவிற்கும் இடையே பீஜிங்கில் கலந் துரையாடல் ஒன்று நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றுள்ளது.

இதன்போது அரசியல், கலாசார மற்றும் பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து கலந்துரையாடியதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன், ஜனாதிபதி உத்தியோகப்பூர்வமற்ற சந்திப்புகளை நடத்த உள்ளார்.

இதன்போது இஸ்ரேல் - பாலஸ்தீனத்துக்கு இடையிலான போர், உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் உட்பட பல்வேறு சர்வதேச விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (7)

கடை வாடகைக்கு

சுன்னாகம் பஸ் நிலையத்தில்
கடை ஒன்று (40x12)
வாடகைக்கு உண்டு.
நேரில் வருபவர்கள் மட்டும்
தொடர்பு கொள்ளவும். (17495)

077 853 5599

சேவல் விற்பனைக்கு



விறாத்து சேவல்கள்,
பெரிய சேவல்கள்
(1Kg 1600/=)
1 1/2 மாத சேவல்
குஞ்சுகள்(ஒன்று 650/=)
விற்பனைக்கு. (17502)

077 332 2433
சுழிபுரம்

VILLAGE HOTEL
பஸ் சேவை
JAFFNA EXPRESS
AIRPORT PICK UP DROP SERVICE
வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/=
(17434)
T.P:077 544 8503

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
1987 . 08 . 23

இறப்பு
2018 . 10 . 18

அமரர் **மரியதாஸ் நிலோஸ்**

நிலோஸ் நீ மரணிக்கவில்லை
மறுவாழ்விற்குள் பிறந்துவிட்டாய்
உன் நினைவுகளின் நேரங்களில்
உன்னத இயேசுவோடு நீ இருப்பாய் என்று
எம்மனதை இறைவார்த்தையோடு இணைக்கின்றோம்
இயேசுவே உன்னத கடவுளின் மகன் என்று.
"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்."
"உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கைகொள்ளும்
எவரும் என்றுமே சாகமாட்டார்."
என்னும் இறைவார்த்தை எமக்கு உணவாகுகின்றது.
இயேசுவே மெசியாவே, நீரே இறைமகன்
அவரது ஆன்மா உம்மில் சாந்திகொள்ள துணைபுரியும்
நீரே நாம் வாழ்வுபெற உலகிற்கு வந்தவர்.
எம்மோடு தங்கும் எம்மை வழிநடத்தும்.

(C-7436)

சென்தோமஸ் லேன்,
முனை, பருத்தித்துறை.

என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

விவசாயிகளுக்கு

இந்தோனேசியாவிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளி கருவி 16 லீட்டர் (Sprayer) சில்வர் பிளாஸ்டிக் காலானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமான தெளிகருவியினை உத்தரவாதத்துடனும் விசேட விலைக்கழிவுடனும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



ஆர்க் என்ரபிறைசஸ்
102, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 021 222 3155
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9, வீதி, பரந்தன் சந்தி. 021 228 2020
எழுதுமட்டுவாள் A9, வீதி. 070 191 3571
Hotline: 071 535 7799 / 071 973 9917
(17494)

விற்பனைக்கு

நல்லூர் அரசடியில் சில மாதங்கள்
பாவித்த றிபிள் கட்டில் ஸ்பிறிங்
பெற், 2 பிறிட்ஸ், 2 ரிவி, 3 ஏசி,
சாப்பாட்டு மேசை, சோபா செற்
விற்பனைக்குண்டு. (17493)

077 049 1513

IELTS - New Batch
ஆரம்பம்
இத்துடன் Basic & Advance
Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான
Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு
செய்து கொடுக்கப்படும். (17489)

விமலம் திருமண சேவை

கனடா, இலங்கை
தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும்
ஏற்ற உள்நாடு, வெளிநாடு
வரன்கள் தாராளமாக உள்ளன. (17455)
கனடா
+16476571347 / +14372446737
இலங்கை
077 240 9276

Canada and Italy Visa
Canada மற்றும் Italy போன்ற
நாடுகளுக்கான Short Term மற்றும்
Long Term விசாக்கள் பெற்றுத் தரப்படும்.
மேலும் சகல நாடுகளுக்கான விசா
விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
Visa Consultant
134, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna.
077 038 5584
(17491)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org